113

மாதர் போதினி

No. 248 ஆகஸ்டு 1918 No. 8

SOUL-WINNING—INDIVIDUAL WORK

ஆத்தும ஆதாயம்—தனி ஆள் வேலை

'ஆத்தும ஆதாயம் செய்குவோமே—இது
ஆண்டவர்க்குப் பிரியம், நாமதினால்
ஆசீர்வாதம் பெறுவோம்.'

தமது விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தி நம்மை மீட்ட ஆண்டவரான இயேசுரட்சகருக்கு நாம் நமதன்பை எதினால் காட்டலாமென்றால், ஆத்துமாக்களை அவரண்டை கொண்டுவருவதேயென்று இயேசுவானவர் பேதுருவோடு உயிர்த்தெழுந்தபின் செய்த தரிசன சம்பாஷணையின் மூலமாய்க் காணலாம். யோ. 21^{15-17} பார்க்க.

ஆத்தும ஆதாயம் என்பது கிறிஸ்துவினால் வரும் இரட்சிப்பைப் பெற்ற ஒவ்வொருவரும் நன்றியோடும் அன்போடும் தாங்களடைந்த இரட்சிப்பைப் பிறருக்குச் சொல்லி அவர்கள் இயேசுவண்டை வந்து இரட்சிப்பைப் பெறச் செய்வதே. அந்திரேயா பேதுருவையும், பிலிப்பு நாத்தான்வேலையும் இயேசுவண்டை நடத்தினார்கள்.

இயேசுவுக்காகப் பேச உனக்கு விருப்பமிருந்து பயமும் கூச்சமுமிருக்குமானால், யாத். 4^{10-12} ஐயும், எரே. 1^{6-10} ஐயும் பார்க்க.

எல்லாப் பெண்களும் வெளியேறிப்போய்க் கிறிஸ்துவுக்காகப் பிரசங்கிக்கக்கூடாவிட்டாலும், ஒவ்வொரு பெண்ணும் எந்த நிலைமையிலிருந்தாலும் ஆத்தும ஆதாயஞ் செய்யத்தக்க ஓர் விசேஷித்த முதன்மையான வழியுண்டு. நமது ஆண்டவர் சமாரியா ஸ்திரீயை இந்த முறையினால் ஆதாயப்படுத்தி அவள் மூலமாய் அநேகர் தம்மிடம் வந்து சேர வழியுண்டாக்கினார். இம்முறைக்குப் பெயர் 'தனி ஆள் வேலை.' இது எப்படிப்பட்டதென்று அறிந்துகொண்டமாத்திரத்தில் எந்த நிலைமையிலுள்ள பெண்ணும் இவ்வூழியஞ் செய்து ஆத்துமாக்களை ஆதா

யப்படுத்தலாம், போக்குச் சொல்ல இடமில்லையென்பது தெளி வாகும்.

'தனி ஆள் வேலை' என்றால் ஒவ்வொருவரும் தனித்தனி ஆட்களோடு கிறிஸ்துவைப்பற்றிப் பேசுவதுதான். வீட்டிலேயே அடைபட்டு வெளியில் போகக்கூடாத ஸ்திரீ முதலாய் இதில் பங்கு பெறலாம். வீட்டுக்கு வழக்கமாயோ வேளாவேளையோ வரும் அரிசிக்காரி, வண்ணாத்தி, பாற்காரி, ஆப்பக்காரி, விறகுக்காரி, தோட்டி முதலியவர்களோடு சம்பாஷிக்கும்போதே கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லலாம். அடிக்கடி வருவோருக்கு ஒழுங்காய்ப் படிப்படியே கிறிஸ்துவைப்பற்றி அறிவும் அன்பும் உண்டாக்கலாம். அயல்வீட்டுப் பெண்களுக்கும் அறிமுகமானவர்களுக்கும் நாம் ருசிக்கிற இயேசுவின் அன்பைப்பற்றிச் சொல்லவேண்டும். கிறிஸ்துவைப்பற்றி நீ இன்னும் சொல்லாத அறிமுகமான யாராவது உண்டா? தூரத்திலுள்ள இந்து சிநேகிதிகளுக்கு கடிதத்தின் மூலமாய்க் கிறிஸ்துவைப்பற்றிய அறிவுண்டாக்கலாம். நீ இந்துக்களோடு பழகுவதின் முக்கிய நோக்கம் கிறிஸ்துவை அவர்களுக்குக் காட்டவேண்டும் என்பதாயிருக்கவேண்டும்.

வெளியில் போகக்கூடியவர்கள் கடைகளிலும், தெருக்களிலும், கிணற்றங்கரையிலும், ரெயில் பிரயாணத்திலும், இன்னும் மற்ற சமயங்களிலும் காண்கிற கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு அவரைப்பற்றிச் சொல்ல ஆயத்தமாயிருக்கவேண்டும். 'பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்.' ஆதலால் உன்னில் கிறிஸ்துவின் அன்பிருந்தால் சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் இந்நேரங்களில் அவரைப்பற்றிச் சொல்லுவாய்.

கிறிஸ்துவுக்காக ஊழியஞ் செய்வதைப்போன்ற சந்தோஷம் வேறொன்றிலுமில்லை. ஓர் ஆத்துமா குணப்படும்போது பரலோகத்திலும் மிகுந்த சந்தோஷமுண்டாகிறது. இயேசுவைப்பற்றிப் பேசுவதாலுண்டாகும் சந்தோஷத்தை அவரவர் தம் அனுபவத்திற் காணலாம். ஆத்துமாக்கள்பேரில் தாகங்கொண்டு ஊக்கமாய் ஜெபித்துவந்தால் கூடியசீக்கிரம் ஜெபித்த நாளிலேயே பேசத்தகுந்த ஆட்களைக் காணலாம், அவர்களோடு ஏற்றபடி பேசவும் சக்தி கிடைக்கும்.

ஒருவரும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருமுன் ஜாக்கிரதையாய் ஆத்துமாக்களைத் தேடிக் கண்டுபிடித்து இயேசுவண்டை கொண்டுவருவோமாக. நீ இதுவரை எத்தனைபேரோடு தனித்து கிறிஸ்துவைப்பற்றிப் பேசி அவரண்டை நடத்தியிருக்கிறாய்? இப்படிப் பேசாமல் நீ இழந்துவிட்ட நற்சமயங்கள் எத்தனை? முடிவு சமீபமாயிருக்கிறதென்று கால அடையாளங்கள் உனக்குக் காட்டவில்லையா? ஜாக்கிரதையாய் ஆத்துமாக்களைத் தேடிப்பிடி.

‘ஆத்மா ஒன்றும் இரட்சிக்காமல்
வெட்கத்தோடே ஆண்டவா,
வெறுங் கையனாக வும்மைக்
கண்டுகொள்ளல் ஆகுமா?’

CHILDREN'S PAGE

A HIDDEN JEWEL

மறைந்திருந்த ஆபரணம்

ஒருகாலத்தில் ஒரு இராஜகுமாரி தான் அருமையாய் நேசித்த தன் சிநேகிதிக்கு அவள் பிறந்தநாளுக்கென்று ஓர் வெகுமானம் தபால்மார்க்கமாய் அனுப்பினாள். தபால்சேவகன் இச்சிறிய பார்ஸலை எடுத்துக்கொண்டு அவள் வீட்டிற்குச் சென்றான். இராஜகுமாரத்தியிடமிருந்து வந்ததாகத் தெரிந்தவுடன் அந்தப் பெண் அதிக ஆவலாக அதை வாங்கி உடைத்துப்பார்க்கவே, பார்வைக்கு அதிக கேவலமான இரும்பினால் செய்யப்பட்ட ஒரு பெரிய முட்டையைக் கண்டு அதிக விசனத்தோடு, ‘இதுதானா எனக்கு வெகுமானம்!’ என்று தரையிலே எறிந்துவிட்டாள். கீழே விழுந்ததும் அதிலிருந்த ஒரு சிறிய குமிழ் கல்லில்பட்டு அந்த இரும்புமுட்டையிலிருந்த சிறிய மூடி திறந்தது. இதைக் கண்டு அவள் வியப்புற்று தரையிலிருந்ததை எடுத்துப் பார்க்க அதற்குள் வெள்ளியினால் செய்யப்பட்ட ஒரு அழகுமுட்டையைக் கண்டு சந்தோஷப்பட்டாள். இரும்புமுட்டையை மறுபடியும் உற்றுப்பார்த்ததில் அதில் இன்னொரு குமிழ் இருக்கக்கண்டு அதையும் அழுத்த இன்னொரு மூடி திறந்தது. அதற்குள்ளுமிருந்த அழகான தங்கமுட்டையைக் கண்டு ஆனந்தித்தாள். மறுபடியும் இன்னொரு பக்கத்தில் காணப்பட்டக் குமிழை அழுத்த அதனுள் வியக்கத்தக்க அழகும் பளபளப்புமாய் மின்னுகிற ஒரு வஸ்துவைக் கண்டு அதை ஆவலோடு எடுத்துப்பார்க்க அதுதான் தன்னருமை சிநேகிதியான இராஜகுமாரத்தி தன் பிறந்தநாளுக்கென்று அனுப்பின விலையேறப்பெற்ற வைடூரியக்கற்களிழைத்த தங்கமோதிரமாயிருந்தது. அதிக மகிழ்ச்சியுடனே மோதிரத்தை எடுத்து தன் கைவிரலில் போட்டுக்கொண்டு, தன்னருமை சிநேகிதியின் அன்பின் அடையாளத்தைப் பார்த்து மனம் மகிழ்ந்தாள்.

இச்சிறு வரலாறு நமது வேதபுஸ்தகத்தை விளக்கத்தக்க ஏற்ற திருஷ்டாந்தமாயிருக்கிறது. சத்தியவேத புஸ்தகமானது மேற்சொன்ன இரும்பு முட்டைக்கொப்பான சாதாரண புஸ்தகத்தைப்போலிருக்கிறதென்று சிலர் அசட்டைசெய்கிறார்கள். ஆனால் அக்கேவலமான

இரும்புமுட்டைக்குள் பொக்கிஷமிருந்ததுபோல் தேவனருளிய இச் சத்திய வேதபுஸ்தகத்துக்குள் ஆவிக்குரிய பொக்கிஷங்கள் ஏராளமாயிருக்கின்றன. ஆதலால் நாம் ஆவலோடும் ஜெபத்தோடும் சத்திய வேதத்தைத் தேடும்போது அதற்குள்ளிருந்து ஏராளமான புதிய பொக்கிஷங்களடங்கிய சத்தியங்களைக் காணலாம். அப்படி ஆவலோடு தேடி பொக்கிஷங்களை நாம் கண்டுபிடிக்க தேவன் உதவிசெய்வாராக.

S. Devaprasadam.

PREPARATION FOR SOUL-WINNING

ஆத்தும ஆதாயம் செய்வதற்கேற்ற கடவுளின் ஒழுங்கு

ஆத்தும ஆதாயம் செய்வதற்கு அவசியமானவை

மத் 28 : 18–20; லூக். 24 : 49; யோவா. 7 : 38; அப். 1 : 4, 8 : லூக். 11 : 13.

'ஓ பரிசுத்தாவியாகிய வெள்ளம் என் இருதயத்தின் ஆழங்களிற் பாய்ந்தோடி ஒவ்வொரு நிமிஷமும் என்னுடைய இருதயத்தையும், ஆசையையும், புலன்களையும் சுத்திகரித்துக் காக்கிறது. பாவத்தினின்றும் பாவத்தின் வல்லமையினின்றும் எனக்குப் பூரண இரட்சிப்பைத் தருகிறது' என்றொரு பக்தன் பாடினார்.

ஆத்தும ஆதாயம் செய்பவர்களுக்கு இதைவிடத் தாழ்ந்த அநுபோகம் தேவாது. நல்ல ஊழியம் செய்ய விரும்பும் கிறிஸ்தவர்களில் ஆயிரக்கணக்கானபேர், தேவனுடைய ராஜ்யத்தில் ஏன் உபயோகமற்றவர்களாயிருக்கிறோம் என்று ஆச்சரியப்படுகிறார்கள். மற்றவர்கள் அநுகூலமனவேலை செய்வதைப் பார்க்கிறார்கள். வேதவாசிப்புக் கூட்டத்தார் சபையில் சேருவதையும், சிறுபிள்ளைகள் இயேசுவிடம் நடத்தப்படுவதையும், புறமதஸ்தர் குணப்படுவதையும் பார்க்கிறார்கள். ஜெபத்துக்குக்கிடைத்த உத்தரவுகளைப்பற்றியும், இயேசுவைவிட்டுப் பின் வாங்கிப்போன இருதயங்களை உருக்கி உடையப்பண்ணின கடிதங்களைப்பற்றியும், வீடுகளைச் சந்தித்ததினால் அவ்வீட்டாரின் புறம்பான, உள்ளான ஜீவியத்தில் உண்டாயிருக்கும் மாறுதல்களைப்பற்றியும் கேள்விப்படுகிறார்கள். இந்தக் காரியங்களை அவர்கள் பார்க்கிறார்கள், அல்லது கேள்விப்படுகிறார்கள். ஆனால் இவைகளில் அவர்களுக்குப் பங்கு இல்லை. தங்கள் ஜெபங்களுக்கு உத்தரவு கிடையாததால் அவர்கள் இருதயம் துக்கமடைகிறது. தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் அடிக்கடி தவறுதல் காணப்படுகிறதால் வெட்கமடைகிறார்கள்.

இவர்களை ஒருவராவது ஆத்துமவிசாரத்தோடே தேடிவருகிறதில்லை. மரணப்படுக்கைக்கு அல்லது உபத்திரவத்திலிருக்கும் ஒரு குடும்பத்திற்குப் போக திடீரென அழைப்பு வருகிறதுமில்லை. இருதயத்தில் குத்தப்பட்ட பாவியோடு பேச அவர்கள் ஒருநாளும் அழைக்கப்பட்டதில்லை. இரட்சகரைப் பின்பற்றுகிறவர்கள்தான்; ஆனால் அவரைப் பிறருக்குத் தெரியப்படுத்தவோ இன்னும் சக்தியற்றவர்கள்.

இவர்கள் இப்படியிருக்க விரும்பார்களாதலால் அவர்களுக்குதவியாகவே இந்த அதிகாரம் எழுதப்படுகிறது.

'பயப்படாதே; இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்' என்று கர்த்தராகிய இயேசு சொன்னார். பவுலும் 'கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும், எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்' என்கிறார். இதுதான் வல்லமையற்ற இந்த கிறிஸ்தவர்கள் வாஞ்சிக்கிற காரியமல்லவா?

நல்லது, இவர்களை வெற்றியுள்ள ஆத்தும ஆதாயம் செய்பவர்களாய் மாற்ற அவசரமானது என்ன?

பாவத்தினின்று பூரண இரக்ஷிப்பு. இயேசுவின் இரத்தத்தாலே ஜெயம்; உயிர்ப்பித்து வல்லமை அளிக்கிற சத்திய ஆவியாகிய பரிசுத்தாவியின் சகவாசமே தேவை.

பாவம் எவ்வளவு அந்தரங்கமாயிருந்தாலும், வல்லமையை முழுவதுமாய்த் தடுக்கும். இருதயத்தில் பேணிவைத்த ஒரே தீயவழக்கம், ஆத்துமா தேவனைத் தரிசிக்கக்கூடாதபடி செய்யும். எரிச்சல், மன்னியாத சிந்தை, பூரண அன்பின் ஆவியை வரவிடாதபடி முழுவதும் தடுக்கும். வர்மம், கசப்பு, பழிவாங்கும் ஆசை விசுவாசத்தின் சிறகை ஒடித்து, மெய்யான ஜெபத்தை அமுக்கிப்போடும். செலுத்தாத கடன், ஈடு செய்யப்படாத நஷ்டம், வரும் ஆசீர்வாதத்தையும் கிருபையையும் அநேக ஆத்துமாக்களிலிருந்து திருப்பியிருக்கிறது.

தேவன் உத்தரவுகொடுக்கக்கூடாத இயல்பினையுடைய ஜெபங்களைக் கேட்பது மெத்தப் பரிதாபமே. அவைகள் வாஞ்சைநிறைந்த ஊக்கமான ஜெபங்களாயிருக்கலாம். தேவனுடைய சிறந்த ஈவுகளைத் தேடும் ஜெபமாயுமிருக்கலாம். ஆனால் தேவன் அவைகளுக்கு உத்தரவுகொடுக்க முடியாது. ஏனென்றால் ஜெபிக்கிறவனின் இருதயத்தில் வழி அடைபட்டிருக்கிறது.

மனிதர் தனக்குச் செய்த அநியாயங்களையும் தீமைகளையும் நினைத்து வெந்துகொண்டிருக்கும் இருதயத்திற்கு, விசுவாசமாகிய பெரிய ஈவினால் பிரயோஜனம் என்ன? தன்னையும், தன் அந்தஸ்தையும், தன் பேர் பிரஸ்தாபத்தையுமே நாடித்தேடி ஜீவித்துவரும் ஒருவனுக்கு

கொழுந்துவிட்டெரியும் அன்பின் அபிஷேகத்தை ஆண்டவர் கொடுக்கக்கூடுமோ? கல்வாரியண்டைக்கு மனத்தாழ்மையோடு இன்னும் வராத ஒருவன்பேரில் பரிசுத்தாவி எப்படி ஊற்றப்படுவார்?

நம்முடைய சாதாரண ஜெபம் 'என்னை நிரப்பும், என்னை உயர்த்தும்' என்பதுதான். தேவனுடைய மாறுத்தரவோ 'உன்னை வெறுமையாக்கும், உன்னைத் தாழ்த்தும்' என்பதாம்.

பலனுள்ள வேலைக்கு ஏழு காரியங்கள் அவசியம்.

(a) இருதய பரிசுத்தம்.
(b) நீதியுள்ள நடக்கை.
(c) வேதத்தின்மேல் வாஞ்சை.
(d) பரிசுத்தாவிக்கு பூரண கீழ்ப்படிதல்.
(e) தேவனோடு ஐக்கியம்.
(f) ஜெபத்தில் வல்லமை.
(g) ஆத்துமாக்கள்பேரில் தாகம்.

ஆவியானவர் விதிக்கிறபடி, இருதயத்திலும் ஜீவியத்திலும் பூரண பரிசுத்தம் நம்மில் இருந்தாலொழிய, அவருடைய வேலையைச்செய்ய முடியாது. அநேகர் இந்தப் பிரமாணத்தை நிறைவேற்ற, முதலாவது மற்ற மனுஷரோடு சமாதானமாகவேண்டும்.

அன்பின் பாடம் இரண்டு பாகமாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. (மத். 5: 23, 24.) 'ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடு ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.' தேவனிடம் நமது தப்பிதத்தை அறிக்கையிடுகிறது போதாது. நாம் யாருக்கு விரோதமாய்க் குற்றம் செய்தோமோ அந்த ஆளிடமும் அறிக்கைசெய்து, அந்த ஆளுக்கு நம்மால் நஷ்டம் உண்டாயிருந்தால், அதற்குப் பதில் செலுத்தவேண்டும். அப்போதுதான் நாம் நமக்காகவும் மற்றவர்களுக்காகவும் செய்யும் ஜெபம் கேட்கப்படும்.

இந்தப்பாடத்தின் இரண்டாம் பாகம் 44-ம் 45-ம் வசனங்களிலிருக்கிறது. தேவஅன்பு இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் நேசிக்கப்படத் தகாதவர்களையும் கிறிஸ்துவின் நிமித்தம் நேசிக்க வேண்டும்.

என்னுடைய ஜெபக்கூட்டமொன்றில், ஒரு துரைசானி தன் ஜெபங்களுக்கு உத்தரவு கிடையாதகாரணம் தனக்கும் இன்னொரு துரைசானிக்கும் இருந்த வெகுகாலச் சண்டையென்று கண்டுகொண்டார்கள், தான் அவர்களுக்கு விரோதமாய் ஒன்றும் செய்ததாகத்

தெரியவில்லை. ஆனால் இருவருக்கும் பிரிவினை இருந்தது. அது கிறிஸ்துவின் ஆவிக்கு விரோதமானது.

அவர்கள் அந்தக் கூட்டத்திலிருந்து நேராய் வீட்டிற்குப்போய், அந்தப் பழைய சிநேகிதிக்குக் கடிதமெழுதி, தனக்கு அன்று இரவு தேவன் காட்டினதைச் சொல்லி, தாங்கள் அவர்களுக்கு விரோதமாய் ஏதாவது குற்றம் செய்திருந்தால் அதை மன்னிக்கவும் கேட்டார்கள். நாற்பத்தெட்டுமணிநேரத்திற்குள் பதில் வந்தது. அவர்கள் கடிதத்திற்கு நன்றிசொல்லி 'பரிசுத்தாவியால் ஏவப்பட்டு நீ செய்த அதே காரியத்தைச் செய்ய, என்னையும் ஆவியானவர் புதுவருஷத்திற்கு முந்தின நாள் ஏவினார். என் பெருமையினால் நான் கீழ்ப்படியவில்லை' என்று எழுதியிருந்தார்கள். இப்படியாக இரண்டு ஜீவியங்களிலிருந்து தடைகள் நீக்கப்பட்டன.

இன்னொரு அம்மாளும்: 'ஏன் என் ஜெபங்களுக்கு உத்தரவு வரவில்லை? முன்னே எனக்கு உடனே பதில் கிடைக்கும். இப்போதோ அநேக வருஷங்களாகப் பதில் இல்லையே' என்று கேட்டார்கள். அவர்களைச் சில கேள்விகள் கேட்டபோது, அதே தடையிருந்தது என்று தெரிந்தது. கர்த்தருடைய பிள்ளைகளில் ஒரு ஆளோடு வைத்த மனஸ்தாபமும் பொறாமையும் கசப்பும், அவர்கள் தனக்காகவும் மற்றவர்களுக்காகவுந் தேடின ஆசீர்வாதம் வராதபடி வழியை அடைத்துப் போட்டது.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் ராஜபாதை திறந்திருந்தது. உட்செல்லத் தாமதித்ததினாலேயே ஆத்துமா ஆழ்ந்த அடிமைத்தனத்திற்குட்பட்டது. பொறாமை, கசப்பாகிய வித்துக்களிலிருந்து பெரிய செடிகள் முளைத்து, பிதாவின் முகத்தை மறைக்கின்றன. உள்ளான இப்பாவத்திலிருந்தும் இலவசமான, நிறைவான, பூரண இரட்சிப்பை இயேசுவின் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். இந்த ஒரே நம்பிக்கைதான் நமக்கு உண்டு.

ஓர் பெரிய தொழிற்சாலையின் தலைவர் அநேக வருஷங்களாக சபைவேலையில் அதிக உதவிசெய்கிறவராயிருந்தார். சில இடங்களில் விசேஷித்த கூட்டங்கள் நடத்த அழைக்கப்பட்டார். அவர் தேவனிடம் சேரக்கூடாதபடி, அவருடைய கோபமே அவருக்குத் தடை என்று திடீரென்று கண்டுகொண்டார். இந்தக் கூட்டங்களில், தன் கையின்கீழ் வேலைசெய்யும் ஜனங்களின் இரட்சிப்பைத் தேடுவது தனது கடமை என்று உணர்த்தப்பட்டார். ஆனால் அதை எப்படிச் செய்யலாம்? அவர் கோபப்படுவதை அவர்கள் அடிக்கடி பார்த்திருக்கிறார்கள்; அவருடைய கடினமான வார்த்தையைக் கேட்டிருக்கிறார்கள். ஆகையால் அவர் உதவிசெய்யக்கூடியவரல்ல. சமீபமான

இவர்களுக்கு நான் உதவிசெய்யக்கூடாதென்றால், மற்றவர்களிடம் போகவும் பாத்திரனல்ல என்று நினைத்தார். பணிவோடு தேவனிடம் வந்து மன்னிப்புக்கேட்கவே தன் வேலைக்காரரிடமும் மன்னிப்புக் கேட்டு ஒப்புரவாகவேண்டுமென்று அவருக்குத் தெரியவந்தது. அப்படியுஞ் செய்யச் சம்மதித்தார்.

அடுத்தநாள், காலை சாப்பாட்டுக்குப்பின், சகல வேலைக்காரரையும் அழைத்தார். தன் கோபத்தினாலே கர்த்தரை கனவீனப்படுத்தி, அவர்களுக்கும் இடறலாயிருந்ததை அறிக்கையிட்டு, அவர்களிடம் மன்னிப்புக்கேட்டார். அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களை மனுஷ சக்திக்கு மேலான பெரிய வல்லமை ஆட்கொண்டது. அது தேவ வல்லமைதான் என்று அவர்கள் உணர்ந்தார்கள். இதை வாசிக்கிறவர்களில் யாராவது, தன்னுடைய உள்ளான பரிசுத்தக்குறைவினாலே, ஆத்துமாக்களை இரட்சிக்கிற வல்லமையும், தாராளமான ஜெபஜீவியமும் அடைபட்டிருக்கிறது என்று கண்டுபிடித்தால், உனக்கு ஒரு வார்த்தை சொல்லுகிறேன். பூரண இரட்சிப்பு என்ன என்பது உனக்கு இப்பொழுது தெளிவாயிருக்கிறதல்லவா? ஏன் இந்த நிமிஷமே நீ அந்த அநுபோகத்தில் பிரவேசிக்கக்கூடாது?

1. பாவமன்னிப்பும் தேவனோடு ஒப்புரவாகுதலும் நாம் அறிந்து அடைந்துகொள்ளவேண்டிய திட்டமான அனுபவங்களென்று எப்படி வேதம் சொல்லுகிறதோ, அப்படியே மாம்சத்தின்மேலும் பாவத்தின் மேலும் அடையும் ஜெயமும் திட்டமான அனுபவமென்பதை அது தெளிவாய்க் காட்டுகிறது. பின்வரும் வசனங்களை எடுத்து வாசி. 1 யோவா. 3: 4-8; எசே. 36: 25-27; 2 கொரி. 6: 16-18; 7: 1; 1 தெச. 4: 3, 23, 24.

2. உன் விஷயத்தில் இந்த அநுபோகம் அவசரம் என்று உணருகிறாயா?

3. தேவன் இப்படிப்பட்ட அநுபோகத்தை உனக்குக் கொடுக்க வல்லவர், சித்தமுள்ளவர் என்று நம்புகிறாயா?

4. அவரே உன் ஜீவியத்தில் எல்லாவற்றிலும் எல்லாமாய் இருக்கவும், ஒவ்வொரு சிறு காரியத்தையும் ஆண்டு, ஒவ்வொரு அடியாய் உன்னை நடத்தவுந்தக்கதாக, உனக்குத் தெரிந்த ஒவ்வொரு பாவத்தையும் சந்தேகமான சந்தோஷங்களையும் தேவனுக்கு சமூலமாய் ஒப்புக்கொடுத்துவிட ஆயத்தமாயிருக்கிறாயா?

5. இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது என்றும், பரிசுத்தமாக்கும் ஆவியானவர் சுத்திகரிக்கப்பட்ட உன் இருதயத்திற்குள் வந்து, உன்னுடைய சத்துவங்கள் மூலமாய் பரிசுத்தமும் அன்பும் நிறைந்த தமது பரிபூரண சித்தத்தை நிறைவேற்ற

அதைத் தமது அகமும் ஆலயமுமாக்குகிறார் என்றும் நம்பி, இந்த இடத்திலே, இப்பொழுதே, விசுவாசத்தினால் இந்த அநுபோகத்தை அடைய மனமாயிருக்கிறாயா?

6. உன் ஆத்துமாவில் தேவன் நடப்பித்த இந்தக் கிரியையைக் குறித்துச் சாட்சிசொல்ல பரிசுத்தாவி கட்டளையிடும்போது, சாட்சி கொடுக்க ஆயத்தமாயிருக்கிறாயா?

இந்த அநுபோகத்திற்கு நடத்தும் படிகளில் கிரமமாய் ஏறிச் செல்வாயானால், தேவனுடைய வாக்குத்தத்தங்களாகிய கன்மலையின்மேல் ஏறிவிட்டாய். 'கர்த்தருக்குக் காத்திரு,' 'நீங்கள் தேடுகிற ஆண்டவர் தம்முடைய ஆலயத்திற்குத் தீவிரமாய் வருவார்.' நீங்கள் பூரண சுயாதீனமடைந்து, அநுகூலமான ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாவீர்கள்?

ஏறக்குறைய இருபது வருஷங்களுக்குமுன்னே ஒரு கப்பல் உத்தியோகஸ்தர், என்னுடைய பாதிராத்திரி ஜெபக்கூட்டத்திற்கு வந்திருக்கும்போது, இந்த அநுபோகத்திற்கு வந்தார். அதுவரை அவர் அமைதியான நல்ல கிறிஸ்தவர். ஆனால் தன் பாவங்கள் மன்னிக்கப்பட்டதென்று நிச்சயமாய் சொல்லக்கூடாதவர். அன்று இரவு அவருக்குப் பாவமன்னிப்பைப்பற்றிய நிச்சயம் மாத்திரமல்ல, மற்றவர்களை இழுக்கவும், இரட்சிக்கவுந்தக்க வல்லமையும் கொடுக்கப்பட்டது. அவர் கப்பலுக்குப்போனவுடனே 'அவரே எல்லாவற்றிலும் முதல்வர்' என்னும் வசனத்தை எழுதிப்போட்டார். சில காலத்திற்குப்பிறகு அஞ்ஞானிகளை ஆதாயப்படுத்த அவருக்கு ஆவல் உண்டானதால், வேலையை ராஜிநாமா செய்துவிட்டு சீனாவுக்கு மிஷனெரியாய்ப் போனார். அவர் சீனாவுக்குப் புறப்பட்டநாளிலே, 'நான் அன்று பாதிராத்திரி ஜெபக்கூட்டத்திலே பெற்ற ஆவியின் அபிஷேகத்தினாலே போகிறேன்' என்று எனக்கு எழுதினார்.

ஒன்பது வருஷங்களுக்குப்பின்பு, பாக்ஸர் கலகம் நடக்கும்போது அவர் இங்கிலாந்துக்கு வந்து, என்னைப்பார்க்க என் வீட்டுக்கு வந்தார். அப்போது தாம் எப்படி அந்த ஆவியின் அபிஷேகத்தாலேயே பாஷை படித்து, ஜனங்களைச்சேர்த்து, கோயில்கட்டி, இயேசுவுக்காக அநேகரை ஆதாயப்படுத்திக் களிகூர்ந்தார் என்பதை விவரமாய் எனக்குச் சொன்னார். மறுபடியும் சீனாவுக்குப் போனார். அங்கே மரித்து ராஜாவின் சமுகத்தைத் தரிசிக்கப் போய்விட்டார். தேவனுடைய நிறைவினால் நிரப்பப்படும்படியாக எல்லாவற்றையும் விட்டுவிட்டார். அவருக்குக் கிடைத்த பலனுக்கு அவர் செலுத்தின கிரயம் மட்டுக்கு மிஞ்சினதா?

FLOWERS

புஷ்பங்கள்

பகவானின் மகிமையை மானிடர்க்கு உணர்த்தும் சிருஷ்டி வகைகளில் புஷ்பங்கள் ஒன்றென்று சொல்லலாம். அதிகாலையில் நந்தவனத்தினுட்சென்று உலாவுவோமேயானால், நமது கண்ணைப் பறிக்கும் மலர்களின் அழகையும், நாசியைத் துளைக்கும் அவைகளின் வாசனையையும் என்னென்றெடுத்துரைப்பேன்! புஷ்பங்கள் ஒரேவகையுமல்ல, ஒரே நாற்றமுடைத்தனவுமல்ல. ஒவ்வொரு வகை மலரும் ஒவ்வொருவித வாசனை யுடைத்தாயிருக்கிறதென்றே சொல்லலாம். ரோஜாபுஷ்பத்தின் வாசனை மல்லிகையின் வாசனையை யொத்ததல்ல, மல்லிகைப்புஷ்பமே தன் இனத்தைச்சேர்ந்த முல்லைப்புஷ்பத்தின் வாசனையினும் வித்தியாசப்படுகின்றது. புஷ்பங்களிலெல்லாம் சிறியதாகிய மகிழம்பூவின் வாசனையோ வெகு நேர்த்தியானது.

‘மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டாம்.’

புஷ்பங்களிலெல்லாம் அழகானது ரோஜா. இந்தியராகிய நாம் தாமரைமலரை எவ்வளவாகக் கொண்டாடுகிறோமோ, அவ்வளவாக ஆங்கிலேயர் ரோஜாமலரைக் கொண்டாடுகிறார்கள். தாமரைக்கொடி குளத்தில் படர்ந்து அதின் மலர்கள் விரிந்து வட்டவட்டமாக சூரிய ஒளியில் பிரகாசிக்கையில் அவை என்ன ஆநந்தத்தை விளைவிக்கின்

றண! அப்படியே ரோஜாச் செடிகளில் புஷ்பங்கள் மலர்ந்து மணம் வீசுவதைக் காண்கையில் உள்ளம் களிக்கின்றதல்லவோ?

மலர்களை மாதர்கள் முடியில் சூடுகையில் அவர்களுக்கு அவை அலங்காரத்தைக் கொடுப்பதுமல்லாமல் அவர்களுக்குள்ளும் இன்பத்தைப் பிறப்பிக்கின்றதென்பதற்கு ஆக்ஷேபனை எதுவும் உண்டோ? ஆலயம், வீடுகள் முதலியவைகளை விசேஷித்த தினங்களில் புஷ்பங்கள் கொண்டலங்கரித்தால் அவை அழகைக் கொடுக்கவில்லையா?

இப்பேர்ப்பட்ட புஷ்பங்களை நாம் கண்ணோக்குகையில் கடவுளின் அதிசய வல்லமையை மறவாதிருப்போமாக.

காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதும் இல்லை, நூற்கிறதும் இல்லை. இன்றைக்கு இருந்து, நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? உடைக்காக நீங்கள் கவலைப்படுகிறதென்ன? முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படுமென்று இயேசு இரட்சகர் கூறுகிறார்.

L. V.

HOW MOTHERS CAN BRING THEIR CHILDREN TO CHRIST

சிறுபிள்ளைகளைத் தாய்மார் எப்படி கிறிஸ்துவிடம் கொண்டுவரலாம்

(தொடர்ச்சி)

ஒரு சபையின் சீருக்கும் சிறப்புக்கும் பிள்ளைகளை ஒழுங்காய் வளர்க்கும் தாய்மாரே காரணம். முன் கூறினபடி தாய்மார் பிள்ளைகளுக்கேற்ற ஆசான்களாய் மாத்திரமல்ல ஞானத்தைப் புகட்டும் போதகர்களாயுமிருப்பது அவசியமே. பல நூல் படித்துப் பக்குவமடைந்த தாய் அமிர்தம்போன்ற வேதத்தை ஊட்டும் பிரசங்கியாயுமிருப்பது அதிக மேன்மையே.

தாய்மாருக்கு இருக்கவேண்டிய ஆறுவது லட்சணம், வேதோபதேசம் செய்வித்தல்.

பிள்ளைகள் மனத்தில் படியத்தக்க இனிமையான பாடங்கள் வேதத்திலேயே அடங்கியிருக்கின்றன. வேதசரித்திரம், வேதஉபதேசம்,

வேதசாஸ்திரம் முதலியவைகளை வயதிற்கும், அறிவுக்கும், படிப்புக்கும் தக்கவாறு போதிக்கவேண்டும். முதலாவது வேதசரித்திரத்தை எடுத்துக் கொண்டால், பூலோக அமைப்பு, மனுஷ உற்பத்தி, பூர்வீக ஜாதியார், தேவஜனம், எகிப்துவின் அடிமைத்தனம், இஸ்ரவேலர் பிரயாணம், பூர்வ சண்டைகள், யூதாராஜாக்கள், தேவ தீர்க்கதரிசிகள் முதலியவைகளைக் கதைபோல் படித்துக்கொடுக்கலாம். இவைகளில் பிள்ளைகளுக்கு விளங்கக்கூடியது வேதபாலரின் சரித்திரமே. அதை நல்லபிள்ளைகள் கெட்டபிள்ளைகள் என்று பிரித்து, காயீன், ஆபேல், ஈசாக்கு, இஸ்மவேல், ஏசா, யாக்கோபு, யோசேப்பு, அண்ணன்மார், சாமுவேல், எலியின் மக்கள் என்ற சரித்திரங்களைப் பிள்ளைகள் விளங்கிக்கொள்ளுமாறு, படரூபமாகவோ, கதைரூபமாகவோ, பாட்டுரூபமாகவோ, போதித்து, கெட்டபிள்ளைகளுக்கு வரும் தண்டனை, நல்லபிள்ளைகளுக்கு வரும் பலன் இவைகளை உணர்த்தவேண்டும். பின்னால் வரைந்துள்ள படத்தினால் சாமுவேல், எலியின் யக்கள் இவர்களுடைய ஜீவியங்களைத் தெளிவாய்ப் போதிக்கும் முறையை அறிந்துகொள்ளலாம்.



படத்தின் பெயர், பால வயது ஏணி.

சிறுபிள்ளைகளின் கிறிஸ்தவ ஜீவியம், 6 படிகள் உள்ள ஒரு ஏணியின்மேல் ஏறி மோட்சம் சேருவதைக் குறிக்கும். அதற்கு உதாரணம் சாமுவேல் என்ற நல்லபையன். கெட்ட ஜீவியம் செய்தால் 4 படிகள்

உள்ள எணியின் மூலமாய் நரகம் போவார்கள். உதாரணம், ஏலியின் மக்கள் (ஓப்னி பினெகாஸ்) மடத்தின் சாரம். 1 சாமு. 4ம் அதிகாரத்தில் பார்க்கவும். சாமுவேல் என்றால் தேவவரம் என்று அர்த்தம். பக்தியுடையவன்; தேவனுக்காக வளர்க்கப்பட்டான். தாயின் ஜெபம் பார்க்க. 1 சாமு. 1: 11. கர்த்தருக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டான். தேவாலயமே அவன் வீடு. ஏலி தாத்தாவே உபாத்தியாயர். தேவனுடைய வேலையைச் செய்ய பால்மறந்தபின் தாயால் ஆலயத்தில் கொண்டுவந்து விடப்பட்டான்.

முதல் படி, மெய் அறிவுடையவன். 2: 11. கர்த்தருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான். தாத்தாவின் உத்தரவுப்படி நடக்க அறிந்தான். ஆலயம் கர்த்தருடைய வீடு என்றும், பணிமுட்டுகள் பரிசுத்தமானது என்றும், ஆலயத்தின் பாத்திரங்கள், மேசை, துப்பட்டி, புஸ்தகம், விளக்கு பரிசுத்தமானவையாதலால் அவைகளைப் பரிசுத்தமாய் உபயோகிக்கவேண்டும் என்றும், தன் வேலை தேவபணிவிடை என்றும் அறிந்தான். விளையும் பயிர் முளையில் தெரியும் என்றபடி பெரிய பக்தனாகத்தக்க மெய்வழியை அறிந்தான்.

2-ம் படி, வேதம் படித்தான். ஏலியின் மூலமாய் நியாயப்பிரமாணத்தைக் கற்றான். மோசேயின் பத்து கட்டளைகளையும், உடன்படிக்கைப் பெட்டியையும், இஸ்ரவேலரின் நிலைமையையும், கர்த்தருக்குச் செலுத்தப்படும் பலிகளையும் திட்டவட்டமாய்க் கற்றான். பிரத்தியட்சமான தேவதரிசனம் இல்லாமலிருந்தும் தேவகாரியங்களிலும் தேவமனுஷனிடத்திலும் அதிக அன்புவைத்து நடந்தான். தேவனைப் பார்க்கவும் பேசவும் அதிக ஆவல்கொண்டிருந்தான்.

3-ம் படி, ஜெபம். பிள்ளைகள் ஜெபம் பண்ணும் பழக்கமுடையவர்களாகவேண்டும். ஜெபக்கூட்டங்களில் இருப்பதுமாத்திரமல்ல, ஜெபம் பண்ணக் கற்றுக்கொடுக்கவும்வேண்டும். இது சிறுபிராய முதல் பிள்ளைகள் அனுசரிக்கவேண்டிய கண்டிப்பான ஒழுங்கு. இதினால் கீழ்ப்படிதல் என்னும் குணமும் அமையும். சாமுவேல் ஜனங்களுக்காகப் பரிந்து ஜெபிக்கிற பக்தனானான். சங். 99: 6; 1 சாமு. 12: 17-23 பார்க்க.

4-ம் படி, கீழ்ப்படிந்தான். 2: 26. பெரியவனாக வளர்ந்தான். கீழ்ப்படிந்தான். தேவன் சாமுவேலைக் கூப்பிட்டது நடுராத்திரி. அயர்ந்து தூங்கினான். சாமுவேலே, சாமுவேலே என்று சத்தம் கேட்டவுடன் எழும்பி ஏலியிடம் ஓடினான். 1 சாமு. 3: 5, 6, 8 பார்க்க. மூன்று தரம் எழும்பி ஓடினான். மனம் சலிக்கவில்லை, விசனப்படவில்லை, கீழ்ப்படியாமையைக் காட்டவில்லை, தூக்கத்தைப் பெரிதாக எண்ணவில்லை. என்ன அருமையான கீழ்ப்படிதல்!

5-ம் படி, உண்மை. 3: 18ல் தேவன் தரிசனமாகி தனக்குச் சொன்னவைகளில் ஒன்றையும் மறைக்காமல் எல்லாவற்றையும் ஏலிக்குச்சொன்ஞன். காரியத்தை மறைப்பதாலும் பொய்சொல்லுவதாலும் உண்டாகும் தீமை பயங்கரமானது. 'பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவை.' வீட்டில், வெளியில், பாடசாலையில், ஆலயத்தில் உண்மை அவசியம். ஏலி தன் பிள்ளைகளை விட சாமுவேலை அதிகமாய் நம்பிஞன்.

6-ம் படி, பரிசுத்தம். இதற்கு அஸ்திபாரம் தாயின் ஜெபமும் பிரதிஷ்டையும். ஆசாரியனுகிய ஏலியோடு சகவாசம், தேவாலயத்தின் ஜீவியம், நியாயப்பிரமாணத்தின் மேலுள்ள வாஞ்சை, தேவசத்தத்தைக் கேட்கும் காது முதலியவைகள் சிறுபிராயத்திலேயே ஒன்றின்மேலொன்ருய் வளர்ந்து, கடசியாக இஸ்ரவேலை ஆளும் ராஜாவாகவும் நியாயாதிபதியாகவும் தேவசித்தத்தைச் சொல்லும் தீர்க்கதரிசியாகவும் ஆஞன். இப்படியே நல்லபிள்ளைகள் இருப்பார்கள் என்பதைப் படத்தைச் சுட்டிக்காட்டிச் சொல்லவும்.

கெட்டபிள்ளைகள் ஏலியின் மக்கள் பேலியாளின் மக்கள் என்ற பட்டம் பெற்ருர்கள். பிசாசின் குட்டிகள் என்ற அர்த்தம்.

1-ம் படி, மெய் அறிவின்மை. தேவனை அறியாதவர்களாயிருந்தார்கள். 2: 12. அறியாமை என்னும் பாவம் அநேக தீமைகளுக்கு வித்து. தேவாலயம், சபை, ஆராதனை முதலியவற்றை பிள்ளை திட்டமாய் அறிந்துகொள்ளுமாறு அவைகளின் அறிகுறிகளை சாடையின் மூலமாய்க் காட்டி கற்றுக்கொடுக்கவேண்டும். தேவாராதனையில் காட்டவேண்டிய பயபக்தியைக் கற்பிக்கவேண்டும்.

2-ம் படி, அசட்டை. இது சிறுவரிடம் காணப்படும் பெரிய குற்றங்களிலொன்று. பெற்ரோர் இதை கவனிப்பது அரிது. ஏலியின் மக்கள் இந்தப் பாவத்தில்தான் அதிகமாய் விருத்தியாஞர்கள். தகப்பனின் புத்தி, நியாயப்பிரமாணத்தின் ஒழுக்கம் முதலியவற்றை அசட்டை செய்தார்கள். 2 : 25ல் கர்த்தருடைய கோபம் மூண்டது. அவர்களின் பாவம் கர்த்தருடைய பார்வையில் பெரிதாகக் காணப்பட்டது. எந்தக் கிருபையின் எத்தனங்களையும் பிள்ளைகள் அசட்டை செய்யாதபடி பார்க்கவேண்டும்.

3-ம் படி, கீழ்ப்படியாமை. சிறுபிள்ளைகள் இளம்பிராயத்திலேயே கீழ்ப்படியக் கற்றுக்கொள்ளவேண்டும். 2: 14, 15. பலியிடும்போது குழப்பம் செய்து தேவனை கோபப்படுத்திஞர்கள். 2 : 22ல் அருவருப்பான பாவம் செய்து ஆராதனையைக் குலைத்தார்கள். நாற்பதுவருஷமாய் கர்த்தருடைய ஊழியம் செய்த ஏலியின் பிள்ளைகள் கீழ்ப்படியாமல் குழப்பமான ஜீவியத்தில் வளர்ந்தார்கள். தகப்பன் சொன்ன புத்தியைக் கேட்டு கீழ்ப்படியவில்லை. 1 சாமு. 2 : 24, 25.

4-ம் படி, துர்க்கிரியை. ஏலியின் மக்கள் துன்மார்க்கமாய் நடந்தார்கள். தேவாலயத்திலும் பலிசெலுத்துவதிலும் பயபக்தியின்றி ஆசாரக் குறைவாய் நடந்தார்கள். துணிகரபாவஞ் செய்ததால் தேவகோபத்துக்குள்ளாகி பயங்கரமாய்த் தண்டிக்கப்பட்டார்கள். நரகத்தின் பிள்ளைகளானார்கள்.

கிறிஸ்தியான் தாசன்

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1918-ஆம் ஆகஸ்டு

1	வி.	யோவா.	10. 19—30	11	ஞா.	யோவா.	13. 12—26	21	பு.	யோவா.	18. 1—14
2	வெ.	„	10. 31—42	12	தி.	„	13. 27—38	22	வி.	„	18. 15—27
3	ச.	„	11. 1—16	13	செ.	„	14. 1—14	23	வெ.	„	18. 28—40
4	ஞா.	„	11. 17—31	14	பு.	„	14. 15—31	24	ச.	„	19. 1—16
5	தி.	„	11. 32—46	15	வி.	„	15. 1—15	25	ஞா.	„	19. 16—30
6	செ.	„	11. 47—57	16	வெ.	„	15. 16—27	26	தி.	„	19. 31—42
7	பு.	„	12. 1—19	17	ச.	„	16. 1—15	27	செ.	„	20. 1—18
8	வி.	„	12. 20—36	18	ஞா.	„	16. 16—33	28	பு.	„	20. 19—31
9	வெ.	„	12. 37—50	19	தி.	„	17. 1—13	29	வி.	„	21. 1—14
10	ச.	„	13. 1—11	20	செ.	„	17. 14—26	30	வெ.	„	21. 15—25
								31	ச.	சங்.	75. 1—10

C. L. S. PRESS, MADRAS—1918